*28*

# தேவனுடைய எழுப்புதல் அழைப்பு

## (8:2, 6-13)

*இராணுவப் படைகளில் சேவை செய்துள்ள மனிதர்கள், தங்களைப் பணிக்கு வரும்படி அழைக்கும் அழைப்பானது தாங்கள் விரும்பாத விஷயங்களில் ஒன்றாக இருந்தது என்று கூறுகின்றனர்: அவர்களை எழுப்புவதற்காகப் பொழுது விடிவதற்கு முன்பு ஒலிக்கப்படும் ஒலிக்கருவியின் சத்தம். இந்தப் பாடம் தேவனுடைய எழுப்புதல் அழைப்பைப் பற்றியதாக உள்ளது. இராணுவ சேனையில் உள்ளவர்கள் தங்களை எழுப்பப் பயன்படும் கருவியின் "காலைவேளையாயிற்று - நீங்கள் எழும்ப வேண்டும் - எழும்ப வேண்டும் - எழும்ப வேண்டும்" என்ற ஒலியை விரும்புவதைவிட அதிகமாக, மக்கள் இந்த தெய்வீக எழுப்புதல் அழைப்பொலியை விரும்புவதில்லை.*

*நமது முந்திய பாடத்தில் நமக்கு, எக்காளங்களைக் கொண்டிருந்த ஏழு தூதர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.*

> *பின்பு, தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்களேயுங் கண்டேன்; அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது.*
>
> *அப்பொழுது, ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத்[1] தங்களை ஆயத்தப்படுத்தினார்கள் (8:2, 6).*
>
> *(''ஒரு தூதன் எக்காளம் ஊதுதல்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*ஏவுதல் பெற்றிராத யூதத்துவ இறைவெளிப்பாட்டு இலக்கியம், தேவனுக்கு முன்பாக நிற்கும் ஏழு பிரதான தூதர்களேப் பற்றிப் பேசுகிறது;[2] இது விளக்க உரையாளர்கள் சிலர் வசனம் 2 அந்த ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கிறது என்று முடிவுசெய்யக் காரணமாயிற்று.[3] இருப்பினும், ''ஏழு'' என்ற எண்ணும் தேவனுக்கு ''முன்பாக'' என்ற கருத்தும்,[4] வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அடிக்கடி வருவதால், "தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்கள்'' என்ற சொற்றொடருக்கு விசேஷித்த தனிச்சிறப்பு எதுவும் இல்லாதிருக்கலாம். ஏழு எக்காளங்களை ஊதுவதற்கு ஏழு தூதர்கள் தேவைப்பட்டனர், அவர்கள் அங்கிருந்தனர். தூதர்களின்மீதல்ல ஆனால் எக்காளங்களின் மீதே வலியுறுத்தம் உள்ளது.*

# தேவன் தமது அக்கறையினிமித்தம் - மனிதர்களை எழுப்புவதற்கு முயற்சி செய்கின்றார்

சீனாய் மலையின்மீது நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது, மக்கள் எக்காள சத்தத்தைக் கேட்டிருந்தனர் (யாத்திராகமம் 19:16-19). மக்களை ஒன்றுகூடும்படி அழைப்பதற்கென்றும், எச்சரிக்கை ஒலிப்பதற்கென்றும், விசேஷித்த நிகழ்ச்சிகளை அறிவிப்பதற்கென்றும் மோசே வெள்ளியினால் இரண்டு எக்காளங்களைச் செய்திருந்தார் (எண்ணாகமம் 10:1-10). கடைசியில் எக்காளம் ஊதுதல் என்பது கர்த்தருடைய நாளின் உட்கட்டமைப்பான பகுதியாக - நியாயத்தீர்ப்புக் கென்று கர்த்தருடைய வருகையின் அடையாளமாக - ஆயிற்று (ஏசாயா 27:13; யோவேல் 2:1; செப்பனியா 1:16; சகரியா 9:14; மத்தேயு 24:31). கர்த்தருடைய கடைசிநாளை நான் நினைக்கும்போது, ''கடைசி எக்காளத்தை" பற்றி நான் நினைக்கின்றேன் (1 கொரிந்தியர் 15:51; 1 தெச லோனிக்கேயர் 4:16ஐக் காணவும்).

கவனத்தை ஈர்த்தல் என்பதே எக்காளத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது.[5] வெளிப்படுத்தின விசேஷம் 8முதல் 11 வரையுள்ள அதிகாரங்களில், எக்காளங்கள் பின்வரும் இரண்டு விசேஷித்த நோக்கங்களுக்குப் பயன்பட்டன: முதலாவது, தேவனுடைய மக்களின் *வெற்றியை அறிவித்தல்*. பரிசுத்தவான்களின் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கும் விதத்தில் எக்காளங்கள் ஒலித்தன, மற்றும் அவைகளைத் தொடர்ந்து பூமியின்மீது நெருப்பைக் கொட்டுதல் நடைபெற்றது (8:3, 5). கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவரல்லாதவர்களையும் ஒரு சேரப் பாதித்ததான, ஏழு முத்திரைகளைப் போலின்றி (எடுத்துக்காட்டாக, 6:9-11ஐக் காணவும்), ஏழு எக்காளங்களின் செயல்பாடுகள் "பூமியின்" மீது (8:5, 7) - அதாவது, "தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷர் மீது மாத்திரம்" (9:4) - விழுந்தன. முதல் நூற்றாண்டு வாசகர்கள் ஏழு எக்காளங்களைப் பற்றி வாசித்தபோது, ஒருவேளை அவர்கள், எரிகோ நகரத்தின்மீது மாபெரும் வெற்றி கொண்டபோது பயன்படுத்தப்பட்ட ஏழு எக்காளங்களைப் பற்றி நினைத்திருக்கலாம் (யோசுவா 6:4, 5, 20).

மனந்திரும்பாதவர்களை *எச்சரித்தல்* என்பது, வெளிப்படுத்தின விசேஷம் 8முதல் 11 வரையிலான அதிகாரங்களில் ஏழு எக்காளங்களின் இரண்டாவது நோக்கமாக இருந்தது. எச்சரிப்பதற்கென்று எக்காளங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான வேதாகம உதாரணம் ஒன்று எசேக்கியேல் 33ல் காணப்பட முடியும். வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில், நகரங்களின் மதில்களைக் காவல் காத்த காவல்காரர்கள் இருந்தனர். விரோதி அணுகுவதை ஒரு காவல்காரர் கண்டால், நகருக்குள் இருப்பவர்களை எச்சரிப்பதற்காக அவர், எக்காளத்தை ஒலிக்க வேண்டியதாயிருந்தது. அவர் எக்காளத்தை ஊதியும், அவர்கள் அந்த எச்சரிக்கையைப் புறக்கணித்தால், அவர்களின் இரத்தப்பழி அவர்களின் சொந்தத் தலைகளின்மீதே இருக்கும். இதற்கு மறுபுறத்தில், அவர் எக்காளம் ஊதத்தவறினால், அவர்களின்

*மரணத்திற்கு அவரையே தேவன் பொறுப்பாளியாக்குவார் (எசேக்கியேல் 33:1-6).*[6]

*வெளிப்படுத்தின விசேஷம் 8 முதல் 11 வரையிலான அதிகாரங்களில் எச்சரித்தல் என்பது எக்காளங்களின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருந்தது என்று நான் கூறுவது ஏன்?*[7] *முதலாவது, செயல்பாட்டின் விரிவளவினால் இது சுட்டிக்காண்பிக்கப்படுகிறது. 8:7-12ல் (9:15, 18ஐக் காணவும்) "மூன்றிலொருபங்கு" என்ற சொற்றொடர் பதினோரு முறை வருவதைக் கவனியுங்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் "ஒரு பகுதி, ஆனால் முழுமையும் அல்ல'' என்பதே பின்னங்களின் அடிப்படை அர்த்தமாக உள்ளது. ஹோமர் ஹெய்லீ அவர்கள், " 'மூன்றிலொருபங்கு' என்பது ஒரு பெரும்பகுதியைக் கருத்தாகத் தெரிவிக்கிறது, ஆனால் அது முழுமையான அழிவாக இருப்பதில்லை; உயிர்வாழ்தல் என்பது இன்னமும் சாத்தியமானதாகவே உள்ளது" என்று கவனித்துள்ளார்.*[8] *நியாயத்தீர்ப்பு என்பது பகுதியானதாக இருந்தபடியால், தண்டனை என்பது இவ்விடத்தில் முற்றான நோக்கமாயிருக்கவில்லை என்பது உறுதி. இரண்டாவது, ஆறாம் எக்காளத்தின் செயல்பாட்டைத் தொடருகிற ஏவுதல் பெற்ற விளக்கவுரையினால், எச்சரிக்கையின் ஆய்வுப்பொருள் கருத்தாகவே தெரிவிக்கப்படுகிறது:*

> *அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டு மனந்திரும்பவுமில்லை, தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை (9:20, 21).*

*மனிதர்கள் ''மனந்திரும்பவில்லை'' என்ற உண்மையின் மீதான வலியுறுத்தமானது, தேவபக்தியற்ற மனிதர்களை மனந்திரும்பும்படி ஊக்கப்படுத்துதல் என்பதே எக்காளங்களின் ஒரே நோக்கமாயிருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது. ஜார்ஜ் லேடு அவர்கள், தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் ''கடுமையான அனுபவங்களினால் மனிதர்களை மண்டியிடத் துரத்தும்படி வடிவமைக்கப்பட்டிருக்கையில், முடிவெடுத்தலுக்கு மிகவும் காலதாமதமாவதற்கு முன்பு, நேரம் இன்னும் இருந்தது'' என்று முடிவுசெய்தார்.*[9] *அழித்தல் என்பதல்ல ஆனால், ஒழுங்குபடுத்துதல் என்பதே தேவனுடைய உடனடியான நோக்கமாக இருந்தது. அவர் தண்டனையைப் பற்றி அக்கறை கொள்வதுபோலவே, மனம் வருந்துதலைப் பற்றியும் அக்கறைக் கொண்டிருந்தார். G. B. கேய்வர்டு அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *[எக்காளங்களினால் அறிவிக்கப்பட்ட வாதைகள்] மனிதர்களின் பாவத்தின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பாக இருக்கின்றன,*

*ஆனால் அது அவரது கடைசி நியாயத்தீர்ப்பாக இருப்பதில்லை. அவைகள் மனிதர்களை மனந்திரும்ப வழிநடத்தும் நோக்கம் கொண்டுள்ளன. எக்காளம் ஊதும் ஏழாம் தூதர், தேவன் தமது இராஜரீக வல்லமையைக் கொண்டு, அசுத்தமானவைகள் யாவையும் என்றென்றைக்குமாக விலக்கப்படுவதில் இருந்து ஆளுகையைத் தொடங்குவதை அறிவிக்கின்றபோது, மற்றும் அதற்குப் பின்பு மாத்திரம் மனந்திரும்புதலுக்கான கதவு மூடப்படும். அது "பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கான" வேளையாய் இருக்கும்* (xi. 18), *அப்போது குணத்தில் வேறு மாற்றம் எதுவும் நடைபெறுதல் என்பதற்கு மிகவும் தாமதமான வேளையாய் இருக்கும் ...* (xxii. ll). *ஆனால் அதுவரையிலும் பரலோக எக்காளங்கள் எச்சரிக்கையை ஒலிப்பதை விட்டுவிடமாட்டா.*[10]

*கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர்களின் குணத்தை நான் ஆழ்ந்து சிந்திக்கையில், அவர்கள் மனந்திரும்புவதற்கு தேவன் இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தது பற்றி நான் திகைப்படைகிறேன். இருப்பினும் தேவன் இதற்கு முன்னர், கள்ள உபதேசம் செய்த யேசபேல் என்பவள் ''மனந்திரும்பும்படியாய் ... தவணை'' கொடுத்தார் (2:21). "கோபிக்கிறதற்குத் தாமதமாயிருத்தல்" (யாக்கோபு 1:19) என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை தொடர்ந்து செயல்விளக்கப் படுத்துகின்றார். கர்த்தர் நம்மிடத்தில் பொறுமையாய் இருப்பதற்காக அவரை துதியுங்கள்! (ரோமர் 2:4; 9:22; 1 தீமோத்தேயு 1:16; 1 பேதுரு 3:20; 2 பேதுரு 3:9, 15).*

*எக்காளங்கள் பற்றிய பாடங்களில் நான், எக்காளங்கள் எச்சரிப்பதற்கென்று இருந்தன என்பதை வலியுறுத்துவேன். உலகில் நான் வாழும் பகுதியில் மக்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவிப்புகளினால் எச்சரிக்கப்படுகின்றனர். உலகின் சிலபகுதிகளில் மணியொலி எழுப்பப்படுவதன் மூலம் மக்கள் எச்சரிக்கப்படுகின்றனர். மற்ற பகுதிகளில் குடிமக்கள், தெருக்களில் உரக்கச் சத்தமிட்டுக் கொண்டு ஓடிவரும் மனிதர்களால் எச்சரிக்கப்படலாம். யோவானின் தரிசனத்தில், எக்காளம் ஊதுதல் என்பது எச்சரிக்கை முறைமையாக இருந்தது.*[11]

## தேவன் மனிதர்களை எழுப்புவதற்கு - மீண்டும் மீண்டும் முயற்சி செய்கின்றார் (8:7-12)

*இந்தப் பாடத்தில் நாம், முதல் நான்கு எக்காளங்களைப் பற்றிப் படிப்போம். எஞ்சிய மூன்று எக்காளங்களும் பின்தொடரும் பாடத்தில் கலந்துரையாடப்படும்.*

*முதல் நான்கு எக்காளங்கள் (முதல் நான்கு முத்திரைகளைப் போலவே) நெருக்கமாக உறவுபட்டுள்ளன: முதல் நான்கு எக்காளங்கள் மனிதர்களை மறைமுகமாக மாத்திரம் தொட்டன - இது மனிதர்களை நேரடியாகப் பாதித்த கடைசி மூன்று எக்காளங்களுக்கு நேர்மாறானதாக உள்ளது (9:3, 4ஐக் காணவும்). மற்றும், முதல் நான்கு எக்காளங்கள் ஒவ்வொன்றும்*

இயல்பான உலகத்தின் சில பகுதியைச் சேதப்படுத்தின. அந்த நாட்களில் மனிதர்கள், இயற்கையை நான்கு வகைகளாகப் பிரித்திருந்தனர்: நிலம், கடல், நன்னீர்கள் மற்றும் வானவியல் அமைப்புகள்.[12] முதல் நான்கு எக்காளங்கள் ஒலித்தபோது, இந்த நான்கு வகைகளும் பாதிக்கப்பட்டன.

பேரழிவுச் சக்திகள் பூமியின்மீது வேகமாக எறியப்படுதல் பற்றிய விவரிப்புகளை நாம் கண்ணோக்குகையில், எகிப்தின் மீது விழுந்த பத்து வாதைகள் பற்றி - விசேஷமாக (தண்ணீர் இரத்தமாக மாறுதல் என்ற) முதலாவது (வானத்தில் இருந்து அக்கினியும் கல்மழையும் பெய்தல் என்ற) ஏழாவது, மற்றும் (நாட்டின் மீது இருள் மூடுதல் என்ற) ஒன்பதாவது வாதைகள் பற்றி - நமக்கு நினைப்பூட்டப்படுகிறது (யாத்திராகமம் 7:20, 21; 9:23-25; 10:21-23).[13] இது நிச்சயமாகவே தற்செயலான நிகழ்வாக இருப்பதில்லை. தேவனுடைய மக்களுக்கும் சமுதாயத்திற்கும் இடையில் ஏற்பட்ட முதல் முரண்பாடு எகிப்தில் ஏற்பட்டது, எகிப்து என்பது நன்மை மற்றும் தீமை ஆகியவற்றிற்கு இடையிலான இறுக்கத்திற்கு முன் உதாரணம் ஆயிற்று (வெளிப்படுத்தின விசேஷம் 11:8ஐக் காணவும்).

தேவன் பத்து வாதைகளை அனுப்பியதற்கான நோக்கம் மற்றும் ஏழு எக்காளங்களுக்கான அவரது நோக்கம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு இணைவு தரவழைக்கப்படலாம்: ஒரு கருத்தமைவில், வாதைகள், இஸ்ரவேலர்களை எகிப்தியர்கள் தவறாக நடத்தியதற்காக அவர்களைத் தண்டித்தன, ஆனால் இஸ்ரவேல் மக்களைப் போகும்படி அனுமதிப்பதற்குப் பார்வோனை இணங்கச் செய்தல் என்பதே அவற்றின் (வாதைகளின்) முதன்மை நோக்கமாக இருந்தது. யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள், "யாத்திராகமத்தின் வாதைகள் தண்டிப்பவையாக இராமல் தூய்மையாக்குபவையாக இருந்தன, அவைகள் பார்வோனைப் பரிதாபநிலைக்குக் கொண்டு வருவதற்காக மாத்திரமல்ல, ஆனால் அவனது மனதை மாற்றுவதற்காக, மனந்திரும்பச் செய்வதற்காக அனுப்பப்பட்டன" என்று எழுதினார்.[14] எக்காளங்களும் பாவிகள் மனந்திரும்பும்படி அவர்களை தூண்டுவதற்கானவைகளாகவே இருந்தன.[15]

### முதலாம் எக்காளம்: பூமியின்மீது பேரழிவு (வசனம் 7)

முதலாம் எக்காளம் ஊதப்பட்டபோது என்ன நடந்தது என்பதை, வசனம் 7 கூறுகிறது:

> முதலாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது, இரத்தங் கலந்த கல்மழையும் அக்கனியும்[16] உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது, அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று (வசனம் 7). ("முதலாம் எக்காளம் ஊதப்பட்டது" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

நமக்கு ஏழாவது வாதை நினைவூட்டப்படுகிறது:

> அப்படியே ... அப்பொழுது கர்த்தர் இடிமுழக்கங்களையும் கல்மழையையும் அனுப்பினார் ... எகிப்து தேசத்தின்மேல் கர்த்தர்

> கல்மழையைப் பெய்யப்பண்ணினார். கல்மழையும் கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடிதாயிருந்தது ... எகிப்து தேசம் எங்கும் மனிதரையும் மிருகஜீவன்களையும், வெளியிலே இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் அந்தக் கல்மழை அழித்து போட்டது. அது வெளியின் பயிர்வகைகளை யெல்லாம் அழித்து, வெளியின் மரங்களையெல்லாம் முறித்துப் போட்டது (யாத்திராகமம் 9:23-25).[17]

"கல்மழையோடே கலந்த அக்கினி" என்பது அனேகமாக மின்னலாக இருந்திருக்கலாம்.

யாத்திராகமத்தின் ஏழாம் வாதையும் வெளிப்படுத்தின விசேஷத்தின் முதலாம் எக்காளமும் தங்களுக்குள் அதிகமான விஷயங்களைப் பொதுவில் கொண்டுள்ளன: இவ்விரு நிகழ்ச்சிகளின்போதும், கல்மழையும் அக்கினியும் பூமியின்மீது விழுந்து, மரங்களையும் புற்களையும் மற்ற பயிர் வகைகளையும் அழித்துப் போட்டன. ஏழாவது வாதை என்பது எகிப்தின் பொருளாதாரத்தை விபரீதமானவகையில் பாதித்து போட்டது, இது முதலாம் எக்காளத்தில் நடந்த நிகழ்ச்சிபோன்று இருந்தது: வெளிப்படுத்தின விசேஷம் 8ல் பேசப்பட்டுள்ள மரங்களில் நிச்சயமாகவே பழமரங்கள் உள்ளடங்கியிருந்தன.[18] தானியங்கள், திராட்சைக் கனி போன்ற பயிர்வகைகளும் எரிந்துபோயின. புல்வெளி நிலங்களின் பேரழிவானது பால், இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தியைப் பாதித்திருக்க வேண்டும்.

இருப்பினும், ஏழாம் வாதைக்கும் முதலாம் எக்காளத்திற்கும் இடையில் வேறுபாடுகளும் இருந்தன. முதலாம் எக்காளம் ஊதப்பட்டபோது, கல்மழை அக்கினி ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமானவை பூமியின்மீது விழுந்தன. அது "இரத்தங் கலந்த" கல்மழையும் அக்கினியுமாக இருந்தது. சகாரா பாலைவனத்தின் மிகநுண்ணியதாக சிகப்பு நிற மணலானது காற்றினால் எழுப்பப்பட்டு மழைத்துளிகளுடன் கலந்து, "சிகப்பு மழையாக"க் கீழே விழுகிறதான திகைப்பூட்டும் வரலாற்றுக் குறிப்பைச் சிலவேளைகளில் விளக்கவுரைகள் குறிப்பிடுகின்றன. இந்தக் கோட்பாடு வெளிப்படுத்தின விசேஷம் 8:7ன் உருவகத்தின்மீது ஆதிக்கம் செலுத்தியிருக்கலாம் என்று அவைகள் கருத்துத் தெரிவிக்கின்றன. தென்மேற்கு ஒக்லஹாமாவில் வசிக்கின்ற நாங்கள் "சிகப்பு மழை" பற்றிய பழங்கால வரலாற்றைச் சார்ந்திருக்கத் தேவையில்லை. நாங்கள் மழைப் புயல்களுடன் மோதுகிற சுழலும் மேகங்களில் சிக்கிய சிகப்பு மணற்துகள்களைத் கண்டிருக்கின்றோம். அந்த சிகப்பு மண் மழையாகப் பெய்வதைக் கண்டிருக்கின்றோம். மேகம் இரத்தமாக மழை பெய்வதை நாங்கள் கண்டதில்லை. யோவான், சிகப்பு மணலுடன் கலந்த மழையைக் காணவில்லை; அவர் ஆகாயத்தில் இருந்து சிகப்புச்சேறு விழுந்ததைக் காணவில்லை; அவர் வானங்களில் இருந்து இரத்தம் ஊற்றப்பட்டதைக் கண்டார். நீங்கள் திறந்த வெளியில் நின்று கொண்டிருப்பதாகவும், மின்னல் ஒளியுடன் மாபெரும் ஆலங்கட்டிக் கற்கள் [hail stones] விழுந்து உங்களைச் சுற்றிலும் உள்ள தரையில் மோதித் தாக்குவதாகவும், வெதுவெதுப்பான, பிசுபிசுப்பான இரத்தம் உங்கள்

முகத்தில் வழிந்தோடுவதாகவும் கற்பனை செய்து பாருங்கள். அது ஏவுதல் பெற்றதன்மையினால் சித்தரிக்கப்பட்ட அச்சுறுத்தும் சித்திரமாக உள்ளது.

ஏழாம் வாதையானது ‘‘எகிப்து தேசம் எங்கும் ... வெளியில் இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் ... அழித்துப்போட்டது’’ (யாத்திராகமம் 9:25அ) என்றிருக்கையில், முதலாம் எக்காளம், பூமியின் மூன்றில் ஒரு பங்கை மாத்திரம் சேதப்படுத்தியது என்பது ஏழாம் வாதைக்கும் முதலாம் எக்காளத்திற்கும் இடையில், மிகவும் குறிப்பிடத்தக்க வேறுபாடாக உள்ளது; தாவரங்களில் மூன்றிலொரு பங்கு மாத்திரமே எரிக்கப்பட்டன.[19] இவைகள் பகுதியான நியாயத்தீர்ப்புக்களாக உள்ளன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். “தேவகோபத்தின் எதிர்நோக்கமானது இரக்கத்தின் நம்பிக்கையினால் சினமூட்டப்பட்டது.”[20]

### இரண்டாம் எக்காளம்: கடலில் பேரழிவு (வசனங்கள் 8, 9)

> இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது,[21] அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று (வசனங்கள் 8, 9). (“இரண்டாம் எக்காளம் ஊதப்பட்டது” என்ற விளக்க படத்தைக் காணவும்.)

எரிகிற பெரிய மலை என்ற உருவகத்தினால் விளக்கவுரையாளர்கள் ஈர்க்கப்படுகின்றனர். இதே போன்ற உருவகமானது பழைய ஏற்பாட்டில் பாபிலோனின் அழிவைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டதைச் சிலர் கவனித்துள்ளனர் (எரேமியா 51:24, 25). சிலர், இந்த அடையாளத் துவமானது ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு பாம்ப்பீயைப் புதையச்செய்து நேப்பிள்ஸ் குடாப்பகுதியை தனிமைப் படுத்தியதான வெசூவியஸ் என்ற எரிமலையின் கொந்தளிப்பில்[22] இருந்து வந்தது என்று நினைக்கின்ற வேளையில், மற்றவர்கள், பத்மு தீவிற்கு அருகில் இருந்த உயிர்த்துடிப்புள்ள எரிமலையைப் பற்றிய கருத்து யோவானின் சிந்தையில் செல்வாக்குச் செலுத்திற்று என்று நம்புகின்றனர்.[23] இருப்பினும் யோவான், “அக்கினியால் பற்றி எரிகிற பெரிய மலையொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது” என்று கூறவில்லை, மாறாக அவர் “பெரிய மலைபோன்றதொன்றை” தாம் கண்டதாகக் கூறினார். பார்க்ளேயின் மொழிபெயர்ப்பில் “what I can only *call* a great mountain burning with fire” [“அக்கினியால் பற்றி எரிகிற பெரிய மலையென்று நான் அழைக்க முடிகிற ஒன்று மாத்திரம்”] என்றுள்ளது.[24] யோவான் கண்டது என்ன என்பதை நாம் நிச்சயமாய் அறிய முடிவதில்லை, ஆனால் அது பொருட்படுத்தப்பட வேண்டிய விஷயமாய் இருப்பதில்லை. ‘‘பெரிய மலைபோன்றதொன்று’’ என்பது நாடகத்துவச் செயல் விளைவுக்காக ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட பேரளவிலான prop[25] என்பதாகவே உள்ளது.

“மலை” என்பது குறிப்பிடத்தக்கதாக இருப்பது இல்லை, ஆனால் அது

கடலின்மீது கொண்டிருந்த செயல்விளைவுதான் குறிப்பிடத்தக்கதாக உள்ளது:[26] "ஆனால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று: சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொரு பங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று." முதலாம் வாதை சிந்தைக்கு வருகிறது: " ... மோசே ... அவன் (பார்வோனு டைய) கண்களுக்கு முன்பாக ... கோலை ஓங்கி, நதியிலுள்ள தண்ணீரை அடிக்க, நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று. நதியின் மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று ..." (யாத்திராகமம் 7:20, 21).

புதிய ஏற்பாட்டின் காலத்தில், மனிதர்கள் தங்கள் வாழ்வாதாரங் களுக்குக் கடலை அதிகமாக எதிர்நோக்கினர். மக்கள்தொகையில் பிரதானமாயிருந்த மையங்கள் கடலோர எல்லைகளில் அமைந்து இருந்தன. நாடுகள் தங்கள் வர்த்தகத்திற்குக் கடலைச் சார்ந்து இருந்தன. மீன்பிடிக்கும் தொழிலானது உணவின் பிரதான ஆதார மூலமாக இருந்தது. கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கானது திடீரென்று மூழ்கிப் போகுதல் மற்றும் மீன்களில் மூன்றில் ஒகு பங்கு இறந்து போகுதல் என்பவற்றினால் முழு உலகமுமே துன்புறுவதாக இருக்கும். இன்றைய நாட்களில் நாம், முதல் நூற்றாண்டில் இருந்தவர்கள்போல் அவ்வளவு அதிகமாகக் கடலைச் சார்ந்து இருப்பதில்லை, ஆனாலும்கூட, கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கு சேதமடைந்து,[27] கடல் வாழ் உயிரினங்களில் மூன்றில் ஒருபங்கு இறந்து போனால்[28] அது இன்றைக்கும் பேரழிவாகவே இருக்கும்.

பிற்பாடு கலசங்கள் ஊற்றப்படுவதை நாம் காணும்போது, தண்ணீர் இரத்தமாக மாற்றப்பட்ட நிகழ்ச்சியானது "பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினவர்களுக்குப் பொருத்தமான நியாயத்தீர்ப்பாக இருந்தது என்று ஒரு தூதன் அறிவிப்பான் (16:6அ)." "மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7ஆ).

**மூன்றாம் எக்காளம்:**
**நிலப்பகுதியின் தண்ணீர்கள் மீது பேரழிவு (வசனங்கள் 10, 11)**

இரண்டாம் எக்காளம் கடலில் உள்ள தண்ணீரைப் பாதித்திருக்கையில், மூன்றாம் எக்காளம் நிலத்தில் உள்ள தண்ணீர் ஆதாரமூலங்களைப் பாதித்தது:

> மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து[29] விழுந்தது, அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின் மேலும், நீரூற்றுகளின் மேலும் விழுந்தது. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொரு பங்கு எட்டியைப் போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள்[30] (வசனங்கள் 10, 11). ("மூன்றாம் எக்காளம் ஊதப்பட்டது" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

விளக்கவுரையாளர்கள் "பெரிய நட்சத்திரம்" என்பதன் அர்த்தத்துடன்

போராடுகையில், அவர்கள் மீண்டும் ஒரு முறை "சிறியவற்றில் அதிக கவனம் செலுத்துகின்றனர்": பாபிலோனிய அரசின் வீழ்ச்சிக்கு இதேபோன்ற சொற்றொடராக்கம் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டது என்று ஒருவர் சுட்டிக்காண்பிக்கின்றார் (ஏசாயா 14:4, 12[31]). இன்னொருவர் வெளிப்படுத்தின விசேஷத்தில் டொமிஷீயன் தான் ஆவிக்குரிய பாபிலோனின்[32] அரசனாக உள்ளான் - எனவே அந்தப் பெரிய நட்சத்திரம் என்பது பேரரசனாகத்தான் இருக்க வேண்டும் - என்று முன்மொழிகின்றார். இன்னும் ஒருவர், அந்த நட்சத்திரத்தை மிகச்சமீபத்திய வரலாற்றின் கதாபாத்திரங்களில் சிலராக அடையாளப்படுத்துகின்றார்.[33] பின்பு, ஒருவர் இது அடுத்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதே நட்சத்திரமாக உள்ளது, எனவே இது பிசாசைக் குறிக்கிறது என்று வலியுறுத்துகின்றார்.[34] இருப்பினும், நடசத்திரம் என்பது மீண்டுமாக ஒரு மேடை prop ஆக உள்ளது; அந்த நட்சத்திரம் குடிநீருக்கான ஆதாரமூலங்களை எவ்வாறு பாதித்தது என்பதே இங்கு வலியுறுத்தமாக உள்ளது: "அந்த நட்சத்தி ரத்திற்கு எட்டியென்று பெயர்; அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனு ஷரில் அநேகர் செத்தார்கள்."[35]

"எட்டி" என்பது என்ன ஒரு தனிவகைப்பட்டு ஒலிக்கும் சொற்றொடராக உள்ளது! இது கரையான் புற்றுக்கள் சிக்கலாக உள்ள அழுகிப்போன மரக்கட்டையின் உருவகங்களைத் தூண்டியெழுப்புகிறது. எட்டி என்பது ஆங்கிலத்தில் "wormwood" எனப்படுகிறது, ஆனால் உண்மையில் இது worm என்ற புழு அல்லது wood என்ற மரம் ஆகிய எதற்கும் தொடர்பு எதுவும் அற்றதாக உள்ளது. அதற்குப்பதிலாக இது, விவரிக்க இயலாத வகையில் காணப்படும் தாவரமாக உள்ளது. எனது மனைவியும் நானும் கென்ட்டகியில் உள்ள ஷாகார் என்ற கிராமத்திற்குச் சென்றபோது, உணவுக்கு மணமூட்டும் மூலிகைகள் கொண்ட சிறு தோட்டம் ஒன்றின் குறுக்கே நான் சென்றிருந்தேன். தாவரங்களின் பலவகைகளைக் குறிப்பிடுவதற்கு அங்கே அடையாளப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த பலகைகளில் ஒன்றில் "wormwood" என்ற பெயர் இருந்தது.

"Wormwood" என்பது *Artemisia absinthium*[36] என்ற தாவரவியல் பெயரினால் அறியப்படும் தாவரங்களுடைய வகையொன்றின் பொதுப்பெயராக உள்ளது, இது கசப்புச் சுவையைப் பண்பாகக் கொண்டுள்ளது. பலஸ்தீனத்தில் பலவகையான தாவரங்கள் வளர்ந்தன. கீழ்ப்படியாமையின் கசப்பான கனியைக் குறிப்பிடுவதற்காக இந்தத் தாவரம், ஏவுதல் பெற்ற எழுத்தாளரால் பயன்படுத்தப்பட்டது (உபாகமம் 29:17, 18; நீதிமொழிகள் 5:4; எரேமியா 9:14, 15; 23:15; புலம்பல் 3:15, 19; ஆமோஸ் 5:7; 6:12). (தமிழ் வேதாகமத்தில் இந்த வசனக்குறிப்புகள் யாவற்றிலும் "எட்டி" என்றே உள்ளது.)

எட்டி மரம் விஷத்தன்மை உடையதல்ல - ஆனால் யோவானின் தரிசனத்தில் இது, தண்ணீரைக் குடிக்க முடியாததாக்கியதோடு மட்டுமின்றி, அதை சாவுக்கேதுவானதாகவும் ஆக்கிற்று. இவ்விதமாக, SEB வேதாகமமானது வசனம் 11ஐ "அந்த நட்சத்திரத்திற்குக் கசப்பு என்று

*பெயர். அது தண்ணீரில் மூன்றிலொரு பகுதியை கசப்பு நீராக மாற்றியது. அந்தத் தண்ணீரினால் மக்களில் பலர் இறந்தனர்; அது விஷமாகியிருந்தது"*[37] *என்று மொழிபெயர்த்துள்ளது.*

*மாசு இல்லாத குடிநீரின்றி மக்கள் நீண்டகாலம் வாழ முடியாது. பூமியின் குடிநீர் ஆதாரமூலங்களில் மூன்றில் ஒரு பகுதி அழிக்கப்பட்டது என்பது பேரழிவுக்குரியதாக இருக்கும். இதன் செயல்தாக்கத்தை மதித்து உணருவதற்கு, வெள்ளங்களும் மற்ற இயற்கைச் சீற்றங்களும் தண்ணீரை அசுத்தப்படுத்திய பேரழிவைக் கொண்டுள்ள பகுதிகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அது நடைபெறும்போது, பாதிக்கப் பட்டவர்களுக்குக் குடிநீரை பொது மற்றும் தனியார் துறையினர் விரைவாக கொண்டு செல்லுகின்றனர். அவ்வாறு செய்யவில்லையென்றால், அந்தப் பகுதியில் வியாதிகள் தாண்டவமாடும், அதைத் தொடர்ந்து மரணம் ஏற்படும். இப்போது, உலகத்தின் மூன்றில் ஒருபகுதியானது அவ்வாறு பேரழிவுக்கு உட்பட்ட பகுதிகளாய் இருத்தல் பற்றி நினைத்துப் பாருங்கள்! அப்படிப்பட்ட சாத்தியக்கூறை நினைத்துப் பார்த்தல் என்பதுகூடக் கற்பனையைத் தடுமாறச் செய்கிறது.*

*நமது நதிகள், ஊற்றுக்கள் மற்றும் பிற உள்நாட்டு நீர்நிலைகள் ஆகியவற்றில் வெகுவாகப் பரவியிருக்கும் மாசுபடுதலை நிறுத்தி அவற்றைக் கண்டனம் செய்ய வேண்டும் என்ற சோதனை இங்குள்ளது - மற்றும் அப்படிப்பட்ட நடைமுறை ஏற்படுத்தப்படலாம்*[38] *ஆனால் தண்ணீர் மாசுபடுதலை நிறுத்தும் செயல் முறை என்பதைக் காட்டிலும் அதிகமான பாடம் ஒன்று இங்குள்ளது: பாவம் என்பது அது தொடும் ஒவ்வொன்றையும் மாசுபடுத்துகிறது.*

***நான்காம் எக்காளம்: வானங்களில் பேரழிவு (வசனம் 12)***

*நான்காம் எக்காளமானது, பழங்காலத்தவர்களால் பயன்படுத்தப்பட்ட கடைசி வகையான வானவியல் அமைப்புக்களைப் பாதித்தது:*

> *நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது "சூரியனில் மூன்றிலொருபங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்தி ரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது, அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது, பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று'' (வசனம் 12). ("நான்காம் எக்காளம் ஊதப்பட்டது" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இந்த எக்காளமானது ஓரளவுக்கு ஒன்பதாம் வாதையை எதிரொலிக்கிறது: "மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டினான். அப்பொழுது எகிப்து தேசம் எங்கும் மூன்றுநாள் மட்டும் காரிருள் உண்டாயிற்று" (யாத்திராகமம் 10:22).*

*இந்த காட்சிகள் உலகளாவிய பேரழிவை நேரடியாக அர்த்தப்படுத்துகின்றன என்ற கருத்தை மேற்கொள்ள முயற்சி செய்கின்றவர்கள் நான்காம் எக்காளத்தைக் குறித்துப் பிரச்சனை ஒன்றைக்*

கொண்டுள்ளனர்:[39] சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவை நேரடி அர்த்தத்தில் தாக்கப்பட்டு இருந்தால், அவற்றின் பிரகாசிப்பானது மூன்றில் ஒரு பங்கு குறைந்து போயிருக்கும், ஆனுல் நாம் இன்னமும் பன்னிரண்டு மணி நேரங்கள் வெளிச்சத்தையும் (குறைவான வெளிச்சம், ஆனால் இன்னமும் அது வெளிச்சமே) அதைத் தொடர்ந்து பன்னிரண்டு மணி நேரங்கள் இருளையும் (கறுமையான இருட்டு, ஆனால் முற்றிலும் இருட்டல்ல) கொண்டுள்ளோம். அதற்கு பதிலாக, யோவானின் தரிசனத்தில், வானத்தில் உள்ள பொருட்கள் தாக்கப்பட்டன என்பது வெளிச்சமே இல்லாதுபோன பகலும் இரவும் ஆன பல பெரிய நேரப்பகுதிகளை விளைவித்தது.

இப்படிப்பட்ட வெளிப்படையான முரண்பாடுகள் யோவானே வருத்தப்படுத்தவில்லை, அவைகள் நம்மையும் கவலைகொள்ளச் செய்யக்கூடாது.[40] அந்த அப்போஸ்தலர், “விபரங்களின் சீர்த்தன்மை பற்றிய அக்கறை எதுவும் இன்றி அடையாளத்துவத்தைக் குவிப்பதன்மூலம் விரும்பத்தக்க செயல் விளைவு ஒன்றை உண்டாக்குவதில் திருப்தியடைந்தார்.’[41] லியோன் மோரிஸ் அவர்களின் விளக்கம் இலக்கின் மீதானதாக உள்ளது; “ … இந்த உக்கிரமான, உணர்வு இறுக்கமான மற்றும் கவிதைத்துவ ஆவிக்குரிய தன்மையை, அவர் ஏதோ புலமைச் செருக்குடைய ஒரு அறிவியல் உரையைத் தொகுத்துக் கொண்டிருந்தார் என்பது போல் வாசித்தல் என்பது மாபெரும் தவறாக உள்ளது. அவர் விரிவான சித்தரிப்புகளை வரைந்து கொண்டிருந்தார், அந்த விபரங்கள் ஒருங்கிசைவு அற்றதாக உள்ளன என்பது சற்றும் பொருட்படுத்தக் கூடியதல்ல. …’[42]

இந்த அண்டம் முழுவதும் பாதிக்கப்பட்டது என்பதே இங்கு கருத்தாக உள்ளது. சூரியன் என்பது நமது வாழ்வின் மற்றும் பூமியின்மீது சக்தியின் முதன்மை ஆதாரமூலமாக உள்ளது. சூரியனின் வலிவுத் தன்மையில் ஏற்படும் எந்த ஒரு பிரதானமான அதிகரிப்பும் அல்லது குறைவும் இந்த கிரகத்தின்மீது உயிர் வாழ்வை அழிக்கும் என்பது நாம் அறிந்த ஒன்றாகவே உள்ளது. தேவன் இந்த அளவையியல் அடையாளத்துவத்தை, பாவத்தின் தீவிரத்தன்மையைக் காண்பிப்பதற்கும் - பாவிகளை மனந்திரும்பும்படிக்கு அழைப்பதற்கும் பயன்படுத்துகின்றார்!

## இயற்கைப் பேரழிவுகளின் மூலமாக - தேவன் மனிதர்களை எச்சரிக்கின்றார்

முதல் நான்கு எக்காளங்களின் அடையாளத்துவத்தில் ஆழமான அர்த்தங்களைக் கண்டறிய, விளக்க உரையாளர்கள் வீரார்ந்த முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அவர்களின் முடிவுகளில் சில மதிப்புடையவைகளாய் இருக்கலாம்[43] - ஆனால் முதல் நான்கு எக்காளங்களை, பூமி, கடல், நிலத்தின் தண்ணீர் மற்றும் வானவெளி ஆகியவற்றில் ஏற்படும் இயற்கைப் பேரழிவுகள் என்று நாம் பாதுகாப்பாக நினைக்க முடியும். அப்படிப்பட்ட பேரழிவுகளில், காட்டுத்தீ, மணற்புயல்கள், சூறாவளிக்காற்று, வெள்ளங்கள், பஞ்சங்கள், பனி மற்றும் பனிக்கட்டிப் புயல்கள்,

*பெருங்காற்றுகள், மண்சரிவுகள், பூமி அதிர்ச்சிகள் மற்றும் பொங்கும் எரிமலைகள் ஆகியவை உள்ளடங்குகின்றன.*

*இந்தப் பேரழிவுகளை, நாம் வலியுறுத்திக்கொண்டுள்ள சிந்தையுடன் ஆழ்ந்து கருதும்போது - இது மனிதர்களை எச்சரிப்பதற்கு எக்காளங்களின் முதன்மைக் காரணமாகும் - நாம் திகைக்கச் செய்யும் ஒரு முடிவை அடைகின்றோம்: மனிதர்களை மனந்திரும்புதலுக்குள் கொண்டுவருவதற்குத் தேவன் இயற்கைப் பேரழிவுகளைப் பயன்படுத்துகின்றார்.*

*கடந்த குளிர்காலத்தில் முதல்முறையாக வெப்பநிலையானது உறைநிலைக்கும் கீழாகச் சென்ற ஒரு சனிக்கிழமை இரவு வேளை என் நினைவுக்கு வருகிறது. அடுத்தநாளான ஞாயிற்றுக் கிழமையன்று மக்கள் ஆராதிக்கக்கூடிவந்த வேளையில், தட்பவெப்ப நிலை என்பது கலந்துரையாடலின் பிரதான கருத்தாக இருந்தது - அப்போது நாங்கள் எங்களது கைகளை வெதுவெதுப்பாக்கிக்கொண்டு, எங்கள் மூக்குகளை உறிஞ்சிக்கொண்டு, டன் கணக்கில் விழுந்துபோன இலைகளைக் குறித்து முறையிட்டுக் கொண்டிருந்தோம். நம்மில் பெரும்பான்மையானவர்கள் தட்பவெப்ப நிலையைப் பற்றி பேசிகொண்டிருக்கின்றோம். நாம் தட்பவெப்ப நிலைபற்றி முறையிட்டுக் கொண்டிருக்கின்றோம். ஒருசிலர் அதை முன்னுரைக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். தட்பவெப்ப நிலையில் இருந்து கற்றுக்கொள்ளுதல் என்பதை நம்மில் பெரும்பான்மை யானவர்கள் செய்யத் தவறிவிடுகின்றோம்.*

*தட்பவெப்ப நிலை வேறுபடும்போது, தேவன் நமக்குத் சிலவற்றைப் போதிக்க முயற்சிசெய்கின்றார் என்று நமது வசனப்பகுதி அறிவிக்கிறது.[44] எடுத்துக்காட்டாக, அவர் நம்மைப் பாவத்தின் தொலைதூரம் சென்றடையக் கூடிய செயல்விளைவுகளைப் புரிந்துகொள்ளச் செய்யலாம். ஆதாம் பாவம் செய்தபோது, அவரிடத்தில் தேவன், "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்" என்று கூறினார் (ஆதியாகமம் 3:17ஆ). அந்த சாபம் செயல்விளைவில் நிலைத்துள்ளது. இந்தப் பாடத்தின் இயற்கை வகைப்பாடுகள், நமக்குக் கீழே உள்ள பூமியும், நமக்கு மேலே உள்ள ஆகாயமும், நம்மைச் சுற்றிலும் உள்ள பொருட்களும் பாவத்தினால் கறைப்பட்டுள்ளன என்று அறிவிக்கின்றன. ஹெய்லீ அவர்கள், "தேவன் நல்ல பூமியை மனிதருடைய பயனுக்காகவும் பயன்பாட்டிற்காகவும் படைத்தார், அதிலிருந்தே அவனது உயிர்வாழ்வு நிலைநிறுத்தப்படுகிறது. ஆனால் மனிதன் பூமியைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளான், அது இப்போது பாவத்தினால் வாதிக்கப்பட்டுள்ளது; அது இப்போது ஒருபகுதி வீணானதாகவும் அவனுடைய விரோதியாகவும் ஆகியுள்ளது" என்று எழுதினார்.[45] உங்களில் சிலர் சாட்சியம் அளிக்க முடிகின்றபடி, இயற்கை என்பது எப்போதுமே வாழ்வின் பாதுகாப்பாளராக இருப்பதில்லை; அது சில வேளைகளில் வாழ்வை அழிப்பதாக உள்ளது. பாவமானது தான் தொடுகிற ஒவ்வொன்றையும் எதிரானதாகப் பாதிக்கிறது.*

*இத்துடன் கூடுதலாக, இவ்வுலகம் நமது இல்லமல்ல என்பதை நமக்கு தேவன் நினைப்பூட்டுவார். சூரியன் பிரகாசிக்கும்போது ஆகாயம் நீலவண்ணமாக இருக்கும்போது, கடற்காற்றுகள் வீசும்போது, பறவைகள்*

*பாடிக்கொண்டிருக்கும்போது, இந்த கிரகத்தில் நாம் எப்போதும் தங்கியிருக்க விரும்பலாம். பின்பு ஆகாயம் இருள் அடைகிறது, கடுங்காற்றுகள் சுழலத் தொடங்குகின்றன, காற்றில் பறக்கும் குப்பைகளும் உடைந்த பொருட்களும் நிறைகின்றன - அப்போது நாம் "பூமியின்மேல் ... அந்நியரும் பரதேசிகளுமாக" (எபிரெயர் 11:13) மாத்திரம் இருக்கின்றோம் என்பதை மீண்டுமாக நினைவுபடுத்திக் கொள்கின்றோம். அப்படிப்பட்ட வேளைகளில் நாம், பழைய கீர்த்தனையின்* "The World Is Not My Home (I'm Just A Passing Thru"[46] [*"இவ்வுலகம் எனது இல்லமல்ல (நான் இதினூடே கடந்து செல்பவனாக மாத்திரம் இருக்கின்றேன்)"*] *என்ற வார்த்தைகளை மாபெரும் புரிந்து கொள்ளுதலுடன் பாடுகின்றோம். பின்பு நமது இருதயம் "கர்த்தரிடத்தில் குடியிருக்க" அதிகமாய் ஏங்குகிறது (2 கொரிந்தியர் 5:8).*

*எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனே நமது ஒரே புகலிடமாய் இருக்கின்றார் என்பதை நாம் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். சிலவேளைகளில் மக்கள், வாழ்வைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுள்ளதாக நினைக்கின்றனர், ஆனால் பின்பு பேரழிவு தாக்குகிறது, சத்தியம் நினைவுக்குக் கொண்டுவரப்படுகிறது: வாழ்வு அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை, நமது வேதவசனப் பகுதியும் இன்றைய தலைப்புச் செய்திகளும், நாட்டில், கடலில் அல்லது ஆகாயத்தில் பாதுகாப்பு இல்லை என்று அறிவிக்கின்றன; இந்த அண்டத்தில் எங்குவேண்டுமென்றாலும் பேரழிவுகள் வரக்கூடும். ஆகையால் நாம், "நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமான" தேவனிடத்தில் ஓடிச்சென்று சேரவேண்டியது இன்றியமையாததாக உள்ளது (சங்கீதம் 46:1).*

*செய்திதாளின் தலைப்புச் செய்திகள், உலகம் முழுவதிலும் இயற்கைப் பேரழிவுகளை அறிவிக்கின்றன; செய்திப் பத்திரிகைகள் விபரங்களைத் தருகின்றன; தொலைக்காட்சித் திரைகள், பேரழிவுகளையும் அவற்றின் பின்தொடரும் துன்பங்களையும் நாம் அப்படியே காண்பதற்கு அனுமதிக்கின்றன. இருப்பினும் இவற்றில் எவையும், தேவன் நமது கவனத்தைப் பெறுவதற்கு இந்தப் பெருந்துன்பங்களை அனுமதிக்கின்றார் என்று நமக்குத் தகவல் அளிப்பதேயில்லை.*

*என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். ரோமர் 2:4, "தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று" அறிவிக்கிறது. தேவன் தமது அன்பை ஆயிரக்கணக்கான மாறுபட்ட வழிகளில் காண்பித்துள்ளார், இது அவரது குமாரனை அனுப்பியதில் உச்சத்தை அடைந்தது (யோவான் 3:16) - மற்றும் மனிதர்கள் அன்பின் இந்த வெளிப்பாடுகளுக்குப் பதில்செயல் செய்ய வேண்டும் என்பதை அவர் விரும்பித் தேர்ந்துகொள்கின்றார். இருப்பினும், அக்கறைக்கான அவரது வெளிப்படையான செயல்களை மக்கள் புறக்கணிக்கின்றபோது, தேவன் விட்டுவிடுவதில்லை. மற்ற யாவும் தவறுகிறபோது, மனிதர்களை அவர்களின் ஆவிக்குரிய உணர்வற்ற தன்மையில் இருந்து எழுப்புவதற்கு அவர் இடர்பாட்டை அனுப்புகின்றார்.*

*நம்மில் பெரும்பான்மையானவர்கள், பெற்றோர் என்ற முறையில்*

செய்ய முயற்சிப்பதையே தேவன் செய்ய முயற்சிக்கின்றார்: நமது பிள்ளைகள் சரியானவற்றைச் செய்ய, அவர்கள் மீது செல்வாக்குத் செலுத்தவதற்கு கிடைக்கும் வழிமுறைகள் ஒவ்வொன்றையும் பயன்படுத்துதல். நாம் நமது பிள்ளைகள்மீது நமது அன்பைக் காண்பிக்கின்றோம், அது அவர்களைச் சரியான பாதையில் காத்துக்கொள்ளும் என்று நாம் நம்புகின்றோம். சிலவேளைகளில் அது அவ்வாறு செய்வதில்லை; எனவே, தேவன் தமது வசனத்தில் நம்மை எச்சரிப்பது போலவே, நாம் அவர்களை எச்சரிக்கின்றோம். சில வேளைகளில் அதுகூடப் போதுமானதாயிருப்பதில்லை, பின்பு நாம் நமது பிள்ளைகள் தவறு செய்தலினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி நாம் நமது பிள்ளைகளை ஒழுங்குபடுத்தியாக வேண்டியுள்ளது - இது நாம் அவர்களை வெறுக்கின்றோம் என்பதினால் அல்ல, ஆனால் நாம் அவர்களை அன்புகூருகின்றோம் என்பதாலும், அவர்கள் பொறுப்புள்ள குடிமக்களாகவும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாகவும் வளரவேண்டும் என்று நாம் விரும்புகின்றோம் என்பதாலும் இவ்வாறு செய்தாக வேண்டியுள்ளது. அதுபோலவே, “கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து” திருத்துகின்றார் (எபிரெயர் 12:6அ). மிகாயீல் வில்காக் அவர்களின் விளக்கத்தை நான் விரும்புகின்றேன்: ஒருகாலத்தில் பூரணப்பட்டதாய் இருந்த அவரது சொந்த பூமியைக்கூட பேரழிவுக்குட்படுத்தும்படி, “மனிதர்களை அவர்களின் உணர்வுகளுக்குக் கொண்டுவருவதற்காக,தேவன் தமது வல்லமையில் இருந்த எல்லாவற்றையும் செய்யவில்லை என்று ஒருக்காலும் கூறப்படாது இருக்கட்டும்.”[47]

பேரழிவு என்பது தேவனுடைய விருப்பங்களின் செயல்விளைவைக் கொண்டுள்ளதா? ஆம். சில வேளைகளில் அவ்வாறே உள்ளது. நான் ஒரு சிறுவனாக இருந்தபோது, ஒக்லஹாமாவில் நாங்கள் வசித்திருந்த லோன் வுல்ஃப் என்ற சிறுநகரில் சூறாவளிக்காற்று வீசியதைக் கவனித்தேன். அது அந்த சிறுநகரின் ஓரத்தில் இருந்த பள்ளிக் கட்டிடத்தை நோக்கி நேராகத் சென்றுகொண்டிருந்தது. பிள்ளைகளைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லக் கூடாதபடிக்கு மிகத் தாமதமாகவே அந்த சூறாவளிக்காற்று கண்டறியப்பட்டது, எனவே பிள்ளைகள் தங்கள் எழுதுமேசைகளின் கீழே பதுங்கும்படி ஆசிரியர்கள் உதவினர். கடைசிக் கணத்தில், அந்தக் சுழல் காற்று திரும்பி, அந்தச் சிறு நகரத்தை வட்டமிட்டது. பின்பு (பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர்களில் ஒருவரான) எனது தாயினிடத்தில், “இது தான் நான் முதன் முறையாக ஜெபம் செய்த வேளையாயிருந்தது’’ என்று ஒரு சிறுமி கூறினாள். அந்த நாளில் கர்த்தருடைய செவியானது புதிய குரல்கள் பலவற்றினால் தாக்கப்பட்டிருக்குமோ என்று நான் சந்தேகப்படுகின்றேன்.

பிரசங்கித்தலில் எனது நாற்பத்து ஐந்து ஆண்டுகள் கால அனுபவத்தில், சகலமும் நன்றாயிருக்கும் போது பலர் தேவனை எப்போதாவதுதான் நினைக்கின்றனர், ஆனால் பேரழிவு தாக்கும்போது அவர்களில் பலர் தேவனை அடிக்கடி நினைக்கின்றனர் என்பதைக் கண்டுள்ளேன்.

ஒக்லஹாமாவின் மிட்வெஸ்ட் சிட்டியில் எனது ஊழியத்தின்போது, எங்களது சபை கூடிவரும் கட்டிடம் தீப்பற்றி எரிந்த வேளையில் ஆர்வமும் உற்சாகமும் அதன் உச்சத்தை அடைந்தது. மனிதகுலத்தின் இவ்வகையான பண்பு பாராட்டத்தக்கதல்ல, ஆனால் இது உண்மை நிலையாக உள்ளது - இது கர்த்தரால் புரிந்து உணரப்பட்டுள்ளது.

தேவன் ரோமாபுரியை எழுப்ப முயற்சி செய்தார் மற்றும் துன்மார்க்கமான அந்தப் பேரரசு மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பினார் என்பதே எக்காளங்களின் உடனடிச் செய்தியாக இருந்தது, ஆனால் ஒவ்வொரு காலத்திலும், சபைக்கு உள்ளும் புறம்பும் உள்ள பாவிகளுக்கு இதிலிருந்து நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்.

பில்லி சன்டே என்பவர் குறிப்பிடத்தக்க புத்துயிர்ப்புப் பிரசங்கியாராக இருந்தார். அவர் ஒரு புதிய நகருக்கு செல்லத் திட்டமிடும்போது, அங்குள்ள புகழ்பெற்ற குடியுரிமைத் தலைவர் ஒருவருக்கு அவர் ஒரு கடிதம் எழுதி, ஆவிக்குரிய வகையில் தேவையில் இருப்பவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றை அவரிடத்தில் கேட்பார். அவர் அப்படிப்பட்ட ஒரு பட்டியலைத் தரும்படிக்கு நியூயார்க் நகர மேயரைக் கேட்டபோது, அந்த மேயர் நியூயார்க் நகரத்தின் தொலைபேசிப் பெயர் அட்டவணைப் புத்தகத்தை அவருக்கு அனுப்பி வைத்தார். கர்த்தரிடத்தில் இருந்து சில வேளைகளில் எழுப்புதல் அழைப்பைப் பெறவேண்டியவர்களின் பட்டியல் ஒன்று தொகுக்கப்பட வேண்டும் என்றால், அதில் அனேகமாக நம் எல்லாருடைய பெயர்களும் இருக்கும்.

எக்காளங்கள் உங்களுக்கும் எனக்கும் ஒரு பாடத்தைக் கொண்டுள்ளன. இடர்ப்பாடு என்னை மண்டியிடச் செய்யும்போது, நான் எங்கிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ, அங்கு நான் இருக்கின்றேன்: அவரிடத்தில் நான், "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக்கா 18:13ஆ) என்று கதறக்கூடிய பூரணமான நிலைப்பாட்டில் இருக்கின்றேன்.

## முடிவுரை (8:13)

யோவான், முதல் நான்கு எக்காளங்கள் ஊதப்பட்டதைக் கண்ட பின்பு, "ஒரு தூதன் (கழுகு)[48] வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன், அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு[49] ஐயோ, ஐயோ, ஐயோ,[50] (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்" என்றுள்ளது (வசனம் 13ஆ). மூன்று "ஐயோக்கள்" கடைசி மூன்று எக்காளங்களைக் குறிக்கின்றன (9:12; 11:14ஐக் காணவும்). முதல் நான்கு எக்காளங்கள் பேரழிவுக்கானவைகளாய் இருந்தன என்பதைப் போல, இனி வரவிருந்தவைகளும் மிகவும் மோசமானவைகளாய் இருந்தன!

ஏழு எக்காளங்களைப் பற்றிய நமது படிப்பு அடுத்த பாடத்தில் தொடரும், ஆனால் இப்போதைக்கு நீங்கள் தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். கர்த்தர்

*ஒரு எக்காள ஒலியுடன் சமீபத்தில் உங்களை விழித்தெழச் செய்வதற்கு முயற்சித்துள்ளாரா? அவர் அதைச் செய்திருந்தால், நீங்கள் உங்கள் காதுகளில் உங்கள் விரலை வைத்து அடைத்துக் கொள்வதன்மூலம் அவரது அழைப்பை அமிழ்ந்து போகச் செய்யாதிருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.*[51] *நீங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தால் (நடபடிகள் 2:38) அதை இப்பொழுதே செய்யுங்கள். நீங்கள் மனந்திரும்பி ஜெபிக்க வேண்டியிருந்தால் ( நடபடிகள் 8:22) அதற்கு இதுவே வேளையாக உள்ளது. சர்தையில் இருந்த சபைக்கு அவரது எச்சரிக்கையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்:*

> *நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து: உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை. ஆகையால் நீ கேட்டுப் பெற்றுக் கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன், நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய் (3:2, 3; மேலும் ரோமர் 13:11; எபேசியர் 5:14; 1 தெசலோனிக்கேயர் 5:6ஐயும் காணவும்).*

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*அதிகமான தகவல்களுக்கு [அடுத்த பக்கமுள்ள] "எக்காளங்கள் என்பது எச்சரிப்பதற்காக'' வரைவட்டவணையைக் காணவும். இதன் முதல் நெடும்பத்தியானது முதல் ஆறு எக்காளங்களைப்பற்றி தொகுத்துரைக்கிறது. இரண்டாம் நெடும்பத்தியானது முதல் ஆறு எக்காளங்களுக்கான பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைத் தருகிறது. மூன்றாம் நெடும்பத்தியானது, எக்காளங்கள் எவ்வாறு ரோமாபுரிக்கு விசேஷித்த எச்சரிக்கைகளாய் இருந்தன என்று காண்பிக்கிறது. நான்காம் நெடும்பத்தியானது எங்குமுள்ள மக்கள் யாவருக்கும் எக்காளங்களை நடைமுறைப்படுத்துகிறது. இந்த வரைவட்டவணையை நீங்கள் ஒரு பெரிய அளவில் பிரதியெடுத்து, எக்காளங்களைப் பற்றி நீங்கள் போதிக்கும் வேளைமுழுவதிலும் உங்கள் வகுப்பறையில் அதைக் தொங்கவிடுவதற்கு விரும்பலாம். அவ்வப்போது இந்த வரைவட்டவணையை மறுக்கண்ணோட்டமிடுவதற்குத் தாமதித்தல் என்பது அனேகமாக மதிப்புமிக்கதாக இருக்கும்.*

*எக்காளங்கள் மீதான இந்த முதல் பாடத்திற்கு, ''இயற்கை தவறுகிறபோது'' என்பது இன்னொரு மாற்றுத் தலைப்பாக உள்ளது. (நீங்கள் இன்னும் அதிகம் விளையாட்டுத்தனமான தலைப்பை விரும்பினால், ''இயற்கை எழும்பி நம்மைக் கடிக்கும்போது'' என்ற தலைப்பை முயற்சி செய்யலாம்.) "தேவனுடைய எக்காளங்கள்" என்பது இன்னொரு தலைப்பாக இருக்க முடியும். அது எல்லா ஏழு எக்காளங்களான*

# எக்காளங்கள் என்பது எச்சரிப்பதற்காக!

| முதல் ஆறு எக்காளங்கள் | பாவத்தின் செயல் விளைவு | ரோமாபுரிக்கு ஒரு எச்சரிக்கை | எல்லாப் பாவிகளுக்கும் ஒரு எச்சரிக்கை |
|---|---|---|---|
| ஒன்று முதல் நான்கு வரை. நிலத்தின்மீது, கடலின்மீது, நிலத்தில் உள்ள தண்ணீர்கள்மீது மற்றும் அண்டத்தின் மீது பேரழிவுகள் | அண்டத்தின்மீது பாவத்தின் செயல் விளைவு (அண்டம் முழுவதும் பாதுகாப்பிற்கு வெளியே இருக்கும்) | இயற்கை பேரழிவுகள் | இந்த உலகம் நமது வீடல்ல! |
| ஐந்தாவது சித்திரவதை செய்கிற ஆனால் கொன்று போடாத வெட்டுக் கிளிகள் | தனிநபர்மீது பாவத்தின் செயல்விளைவு (ஆவிக்குரிய மற்றும் ஒழுக்க ரீதியான சீரழிவு) | உள்ளான சீர்குலைவுகள் | பாவியின் வழி கடினமாக உள்ளது! |
| ஆறாவது, அழிக்கின்ற தூதர்கள்/சேனை | மற்றவர்கள்மீது பாவத்தின் செயல்விளைவு (யுத்தத்தின் அடாத செயல்கள் மூலம் விவரிக்கப்பட்டபடி) | வெளியான படையெடுப்பு | பாவத்தின் செயல் விளைவுகள் பயங்கர மானவையாகவும் தொலைதூரத்தை அடையக் கூடியவையாகவும் உள்ளன! |

**ஏழாவது (கடைசி) எக்காளம் மிகவும் தாமதமானதாக இருக்கும்! இப்போதே மனந்திரும்புங்கள்!**

ஒரு பாடத்திற்கும் பயன்படுத்தப்பட முடியும். "பூமியின் மீது அக்கினி" (ஹரால்டு ஹேஸ்ஸிலிப்), மற்றும் "மனந்திரும்பாத மனிதத்துவத்தின் பரிதாபநிலை" (எட்வர்டு மெக்டோவெல்) ஆகியவை எல்லா எக்காளங்களையும் சுற்றிச்சூழுகிற பிற தலைப்புக்களாக உள்ளன.

இந்தப் பாடத்திற்கு இணைவாய், இந்தப் புத்தகத்தில் இனிவரும் "இயற்கையின் பேரழிவுகளால் தேவனுடைய உபயோகங்களைப்பற்றிய கேள்விகள்" என்ற பாடத்தைப் பற்றி விவாதிக்க நீங்கள் விரும்பலாம்.

---

குறிப்புகள்

[1]"ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள்" என்பது அனேகமாக, அந்த தூதர்கள் எக்காளங்களைத் தங்கள் உதடுகளினருகில் உயர்த்திப்பிடித்தனர் என்று மாத்திரம் அர்த்தப்படலாம். இது நாடகம் மற்றும் மர்மம் ஆகியவற்றுடன் கூட்டுவதற்கான ஒரு விபரமாக உள்ளது. [2]ஏனோக்கு 20:7 மற்றும் தோபித்து 12:15 ஆகியவை தலையாய இரு குறிப்புகளாக உள்ளன. இவைகள், பிரதான தூதர்களுக்குப் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. இவ்வேழுபேர்களில் இருவருக்கு மாத்திரமே மிகாவேல் மற்றும் காபிரியேல் என்று வேதவசனத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (தானியேல் 8:16; 9:21; 10:13, 21; 12:1; லூக்கா 1:26; யூதா 9; வெளிப்படுத்தின விசேஷம் 12:7). ஏனோக்கு, தோபித்து போன்ற புத்தகங்கள் கர்த்தரிடத்தில் இருந்து வந்த வெளிப்படுத்துதல்களாய் இராமல், ஏவுதல் பெற்றிராத பாரம்பரியமாக உள்ளன. [3]"ஏழு தூதர்கள்" என்பதற்கு முன்புள்ள "the" என்ற திட்டவட்டமான சுட்டுச்சொல்லில் முக்கியத்துவத்தைத் சிலர் காண்கின்றனர். ஆனால் இது வெளிப்படுத்தின விசேஷத்தில் அசாதாரணமானது அல்ல: ஏழு சபைகளுக்குமான தூதர்கள்/செய்தியாளர்கள் ஒவ்வொருவரும் திட்டவட்டமான சுட்டுச் சொல்லினால் குறிப்பிடப்பட்டனர் (உதாரணத்திற்கு 2:1ஐக் காணவும்), மற்றும் ஏழு கலசங்கள் ஊற்றிய தூதர்களும் அவ்வாறே குறிப்பிடப்பட்டனர் (16:3ஐக் காணவும்). சில வேளைகளின் தனித்தனித் தூதர்களும் "the angel" என்று குறிப்பிடப்பட்டனர் (உதாரணமாக, 8:5ஐக் காணவும்). [4]தேவனுக்கு "முன்பாக" இருத்தல் என்பது குறித்து, 1:4; 4:5, 10; 5:8; 7:9, 11, 15; 11:4, 16; 14:3; 15:4 ஆகிய வசனங்களைக் காணவும். [5]எக்காளத்தைப் பலர், முக்கியத்துவமான நிகழ்ச்சியை அல்லது முக்கியமான தனிநபரைப் பற்றி அறிவிக்கும் கோலாகல நிகழ்ச்சியுடன் இணைவிக்கின்றனர். தூபவர்க்கத்தின் அடையாளத்துவமானது கிறிஸ்தவ ஆராதனையில் தூபவர்க்கத்தைப் பயன்படுத்துதலை நியாயப்படுத்தாதது போலவே, எக்காளத்தின் அடையாளத்துவமானது கிறிஸ்தவ ஆராதனையில் எக்காளத்தின் பயன்பாட்டை நியாயப்படுத்துவதில்லை. [6]வெளிப்படுத்தின் விசேஷம் 8 முதல் 11 வரையான அதிகாரங்களில், தேவனுடைய மனிதர்களை உலகப்பிரகாரமான அபாயம் குறித்து எச்சரித்தல் அல்ல ஆனால் ஆவிக்குரிய அபாயம் குறித்து எச்சரித்தல் என்பதே வலியுறுத்தமாய் இருந்தது. [7]எக்காளங்கள் எச்சரிப்பதற்கானவைகள் என்ற உண்மையின் பின்னனி என்ற வகையில் நீங்கள், "பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்தை"ப் பற்றி பேசுகிற 3:10 வசனத்தை மறு கண்ணோட்டமிட விரும்பலாம். "பூமியின்மீது குடியிருப்பவர்களை [அதாவது அவிசுவாசத்தை] சோதித்தல் அல்லது பரீட்சித்தல்" என்பது இந்தச் சோதனையின் ஒரு நோக்கமாக இருந்தது. [8]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 219. முத்திரைகள்

*உடைக்கப்பட்டபோது, மங்கின நிறமுள்ள குதிரைகளில் ஏறிவந்தவர், "பூமியின் காற்பங்கில் உள்ளவர்களுக்கு'' மரணத்தினால் வாதனை அளிக்கும்படி அனுமதிக்கப்பட்டார் (6:8). மூன்றில் ஒரு பங்கு என்பது கால்பங்கைவிட அதிகமானதாக, கால்பங்கின்மீது கூடுதலை இடுவதாக உள்ளது.* [9]George Eldon Ladd, *A Commentary on the Revelation of John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 124. [10]G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 112.

*[11]இந்த வேளையில் நீங்கள் ''எச்சரிக்கும் எக்காளங்கள்'' என்ற வரைவட்டவணையை அறிமுகப்படுத்த விரும்பலாம் (இந்தப் பாடத்தின் ''போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்'' என்ற பகுதியின் முடிவில் இந்த வரைவட்டவணையைக் காணவும்).* [12]See Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 155. *[13]இவைகளுடன் கூடுதலாக, ஐந்தாம் எக்காளம், வெட்டுக்கிளிகளினால் ஏற்பட்ட வாதையை (யாத்திராகமம் 10:1-20) நமக்கு நினைவூட்டும். இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் அந்தப் பத்துவாதைகளை அப்படியே பிரதியெடுத்திருப்பதில்லை என்பதை அறியுங்கள். அவற்றில் ஒருசில மாத்திரமே இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன, அவ்வாறு பயன்படுத்தப்பட்டவைகளும் மாறுபட்ட பாணியில் கையாளப்பட்டுள்ளன. இவ்விதமாக நாம் வாதைகளில் இருந்து சில பொதுவான முடிவுகளைத் தரவழைக்க முடியும் என்றாலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் அடையாளத்துவம் தனிவகைப்பட்டது என்று அறிய நம்மை அனுமதிக்கிற "திரிபை" கொண்டுள்ளோம்.* [14]Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: HarperCollins Publishers, 1988), 98. *[15]பார்வோன் மனந்திரும்பவில்லை. யோவானின் நாட்களில் இருந்த பாவிகளில் பெரும்பான்மையானவர்கள் மனந்திரும்பமாட்டார்கள், மற்றும் இன்றைய நாட்களிலும் பாவிகளில் பெரும்பான்மையானவர்கள் மனந்திரும்பமாட்டார்கள் - ஆனால் அது பிற்பாடு வலியுறுத்தப்படும். [16]தெய்வீக நியாயத்தீர்ப்பு என்ற வகையில் கல்மழை மற்றும் அக்கினி என்பவற்றின் அடையாளத்துவமானது பழைய ஏற்பாடு முழுவதிலும் காணப்படுகிறது (உதாரணத்திற்கு, யோபு 38:22, 23; ஏசாயா 28:2, 17; 30:30, 31 ஆகிய வசனங்களைக் காணவும்). [17]எக்காளங்களின் பாதிப்புகளில் இருந்து கிறிஸ்தவர்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தது போலவே (யாத்திராகமம் 9:26), கல்மழையின் பாதிப்புகளில் இருந்து இஸ்ரவேல் மக்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். [18]''மரங்கள்'' என்பதற்கான கிரேக்க வார்த்தையானது கனிதரும் மரங்களைக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (மத்தேயு 7:17 மற்றும் யூதா 12 ஆகிய வசனங்களைக் காணவும்). [19]8:7 வசனமானது "பசும்புல்லெல்லாம் எரிந்துபோயிற்று" என்று கூறுகிற அதேவேளையில், பின்பு 9:4அவில், வெட்டுக்கிளிகள் "பூமியின் புல்லையும் ... சேதப்படுத்தாமல்" இருக்கும்படி கூறப்பட்டது என்ற உண்மை பற்றி சிலர் கவலைகொள்கின்றனர். சீர்த்தன்மை என்பது உருவகத்தின் முதன்மையான நோக்கம் அல்ல என்பதை நினைவில் வையுங்கள். சீரற்றதன்மை எதுவும் இதில் உள்ளடங்கவில்லை. பூமியின் மூன்றில் ஒரு பங்கில் இருந்த "பசும்புல்லெல்லாம்" எரிந்து போகையில் பாதிக்கப்பட்டது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கலாம்.* [20]Rubel Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* (Nashville: 20th Century Christian Foundation, 1983), 59.

*[21]ஒருவேளை இது மத்திய தரைக்கடலுக்கான குறிப்பாயிருக்கலாம். [22]இந்த எரிமலை கொந்தளிப்பானது கி.பி. 79ல் ஏற்பட்டது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது 95-97ம் ஆண்டுகளில் எழுதப்பட்டிருந்தது என்றால் அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் இந்தக் கொந்தளிப்பு நடைபெற்றிருந்தது. இந்தக்*

கொந்தளிப்புப் பற்றிய அளவியல் விவரிப்பிற்கு. Summers, 156ல் காணவும். [23]தெயா என்பது யோவான் கண்டிருக்கக் கூடிய இப்படிப்பட்ட உயிருள்ள எரிமலைகளில் ஒன்றாக இருந்தது. மலைகள் வெடித்து "கடலில் வீசியெறியப்படும்போது" நடப்பதென்ன என்பது பற்றிய விளக்கமான விவரிப்பிற்கு, Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishinng House, 1979), 187 என்ற புத்தகத்தில் காணவும். [24]William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 43. [25]நாடகத்துவ உருவாக்கங்களில், மேடை அமைப்பின் பாகமாக உள்ள அல்லது நடிகர்களால் பயன்படுகிற எந்த ஒரு பொருளும் "a prop" (இது "property" என்பதன் குறுவடிவமாக உள்ளது) என்று அழைக்கப்படுகிறது. [26]மூன்றாம் கலசம் ஊற்றப்பப்படும்போது, கடலானது இரத்தமாக மாறுவதை நாம் மறுபடியும் காண்போம், ஆனால் அங்கு மலை பற்றி எதுவும் குறிப்பிடப்படாது (16:3). மலை என்பது திறவுகோல் விபரமாயிருப்பதில்லை, ஆனுல் கடலின் தண்ணீர் இரத்தமாக மாறுதல் என்பதே திறவுகோல் விபரமாக உள்ளது. [27]1981, ஜனவரி 1ம் தேதிவரையில், ஏறக்குறைய 25,000 கடல் கலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 8,000க்கும் அதிகமான கப்பல்கள் ஒரே வேளையில் அழிக்கப்படுதல் பற்றிக் கற்பனை செய்துபாருங்கள்! [28]பூமியின் மேற்பரப்பில் நான்கில் மூன்று பங்கு கடல்கள் இடம் பெற்றுள்ளன. அந்தப் பகுதியில் மூன்றில் ஒருபங்கு என்பது பூமியின் தரைப்பகுதியின் பரப்பிற்குச் சமமாக இருக்கும். அவ்வளவு பகுதியானது எதிர்விதமாய்ப் பாதிக்கப்பட்டிருந்தால், அது உண்மையில் ஒரு பேரழிவாகவே இருந்திருக்கும்! [29]இவ்விடத்திலும், 9:1லும், வானத்திலிருந்து நட்சத்திரங்கள் விழுந்தன என்றிருக்கும்போது முன்பு 6:13ல், எல்லா நட்சத்திரங்களும் பூமியில் விழுந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ள உண்மை குறித்துத் சிலர் வருத்தம் அடைகின்றனர். பின்வரும் உண்மைகளை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: (1) இது உண்மை நிலையாயிராமல் அடையாளத்துவமாக உள்ளது. (உண்மையான ஒரு நட்சத்திரம் பூமியில் விழ முடியாது, ஏனெனில் நட்சத்திரங்கள் என்பவை பூமியைவிடப் பெரியதானவைகளாய் இருக்கின்றன.) (2) சீர்த்தன்மை என்பது இந்தப் புத்தகத்தில் சார்பளவில் மாத்திரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. (3) ஒவ்வொரு பகுதியும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ "தொடக்கக் கருத்துக்களை" கொண்டுள்ளன, எனவே முந்திய பகுதியில் பூமியின் மீது நட்சத்திரங்கள் விழுந்தன என்ற உண்மையானது இந்தப் பகுதியில் செய்வதற்கு எதையும் கொண்டிருப்பதில்லை. [30]தாவரங்களில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்பட்டபோதும் (முதலாம் எக்காளம்), கப்பல்களில் மூன்றில் ஒரு பங்கு அழிக்கப்பட்டபோதும் (இரண்டாம் எக்காளம்) மக்கள் இறந்திருக்கலாம் என்று நாம் யூகித்தாலும், இதுதான் மனிதர்களின் மரணம் பற்றிய முதல் திட்டவட்டமான குறிப்பிடுதலாக உள்ளது. இருப்பினும் முன்பே குறிப்பிட்டபடி, முதல் நான்கு எக்காளங்கள் மக்களை நேரடியாக அல்ல, ஆனால் மறைமுகமாகவே பாதித்தன. வசனம் 11, மனுஷரில் "மூன்றில்" ஒரு பங்கினர் இறந்துபோயினர் என்று கூறுவதில்லை, ஆனால் "மனுஷரில் அநேகர் செத்தார்கள்" என்று மாத்திரமே கூறுகிறது. மக்கள் மரித்தனர் என்ற உண்மையானது இவ்விடத்தில் ஏற்படுத்தப்படும் கருத்தில் ஏறக்குறைய தற்செயலானதாகவே உள்ளது.

[31]KJVயில், ஏசாயா 14:12ல் "Lucifer" என்றுள்ளது ('தமிழ் வேதாகமத்தில் இது ''விடிவெள்ளி'' என்றுள்ளது). இந்தச் சொற்றொடர் பிசாசையல்ல ஆனுல் பாபிலோனின் அரசனைக் குறிக்கிறது. "Lucifer" என்பது சாத்தானைக் குறிக்கும் வேதாகமரீதியான பெயராக இருப்பதில்லை. [32]அதிகாரங்கள் 17, 18ல் ரோமாபுரியானது பாபிலோன் என்று அழைக்கப்பட்டுள்ளது (விசேஷமாக 17:9, 18ஐக் காணவும்). [33]தொடர்வரலாற்றுக் கண்ணோட்டத்தைப்

பற்றிக்கொண்டுள்ளவர்கள், நட்சத்திரத்தைக் கடந்தகால வரலாற்றின் கதாபாத்திரம் என்று அடையாளப்படுத்துகின்றனர். அதே வேளையில் ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பலர், இது அவர்களின் தனிப்பட்ட பயங்கரத்திற்குரிய, வரலாற்றுரீதியான "அந்தி கிறிஸ்து" என்று நம்புகின்றனர். (இந்தப் புத்தகத்தில் பிற்பகுதியில் காணப்படும் "அந்தி கிறிஸ்துவும் வெளிப்படுத்தின விசேஷமும்" என்ற பாடத்தில் காணவும்.) [34]C. S. Lewis அவர்கள் தமது *Screwtape Letters* (New York: Macmillan Publishing Co., 1973 ) என்ற புகழ்பெற்ற புத்தகத்தில், சாத்தானுடைய பயிற்சி அனுபவம் பெற்ற வேலையாளைக் குறிப்பதற்கு "Wormwood" என்று பயன்படுத்தினார். [35]பல எழுத்தாளர்கள், இது மாராவில் (இது "கசப்பு" என்று அர்த்தப்படுகிறது) நடந்த அற்புதத்தின் மறுதலை என்று குறிப்பிடுகின்றனர்: மாராவில் கசப்பான தண்ணீர் இனிமையானதாக மாற்றப்பட்டது (யாத்திராகமம் 15:23-26). [36]*Apsinthon* என்ற கிரேக்க வார்த்தை இவ்விடத்தில் "Wormwood" (தமிழில் "எட்டி") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [37]*The Simple English™ Bible, International Edition* (Dallas: International Bible Foundation, 1980). [38]முதலாம் எக்காளம் கலந்துரையாடப்படும்போது, நீங்கள் மரங்களின் வகைதொகையற்ற அழிவைக் குறிப்பிட விரும்பலாம்; இரண்டாம் மற்றும் மூன்றாம் எக்காளங்களின் தொடர்பாக, தண்ணீர் மாசுபடுத்தப்படுதல் பற்றிக் குறிப்பிடலாம்; மற்றும் நான்காம் எக்காளமானது காற்று மாசுப்படுத்தப்படுதலை நமக்கு நினைவூட்டலாம். நீண்ட காலத்திற்கு முன்பு மனித குலத்திற்கு பூமியைப் பண்படுத்தும் பணி தரப்பட்டது (ஆதியாகமம் 1:28; 2:15), ஆனால் நாம் அந்தப் பணிப்பொறுப்பிற்கு உண்மையுள்ளவர்களாய் நடந்து கொண்டிருக்கவில்லை. நமது பணிப்பொறுப்புப் பற்றி ஒருநாளில் நாம் கணக்கு ஒப்புவித்தாக வேண்டும். (1 கொரிந்தியர் 4:2ஐக் காணவும்.) உலகப்பிரகாரமான பணிப்பொறுப்பு என்பது ஆவிக்குரிய பணிப் பொறுப்புப் போன்று அவ்வளவு முக்கியமானதல்ல, ஆனாலும் அது முக்கியமானதாகவே உள்ளது. [39]நாம், நேரடி அர்த்தத்தில் உண்மையாய் இருக்க முடியாத மற்ற பல நிகழ்ச்சிகளை ஏற்கனவே கண்டுள்ளோம்: ஆகாயத்தில் இருந்து இரத்தம் விழுவதில்லை; மலைகள் கடலுக்குள் தூக்கியெறியப்படுவதில்லை; நட்சத்திரங்கள் பூமியில் விழுவதில்லை. இவற்றில் கடைசி விஷயமானது "வீழும் நட்சத்திரம்" அல்லது "எரி நட்சத்திரம்" (வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், பூமியின் வானவெளியினுள் விழுகின்ற ஒரு விண்கல்) என்று விளக்கப்பட்டுள்ளது, ஆனாலும் ''வீழும் நட்சத்திரம்'' என்பது நேரடியான அர்த்தத்தில் ஒரு நட்சத்திரமாகியிருக்க முடியாது. [40]SEB வேதாகமமானது சீரற்ற தன்மையை நீக்க முயற்சி செய்கிற தனித்தன்மை வாய்ந்த மொழிபெயர்ப்பைக் கொண்டுள்ளது. அது "The day was only one-third as bright as usual. And the night was two-thirds darker" [''பகல்பொழுதும் வழக்கமாய் இருப்பதில் மூன்றில் ஒரு பங்கே வெளிச்சம் கொண்டிருந்தது. மற்றும் இரவுப்பொழுதானது மூன்றில் இரண்டு பங்கு அதிகம் இருளாய் இருந்தது"] என்று கூறுகிறது.

[41]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.). 113. [42]Leon Morris, *Revelation,* rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 120. [43]பாடப்பகுதியிலும் அடிக்குறிப்புகளிலும் நான், இந்த முடிவுகளில் ஒரு சிலவற்றை, விசேஷமாக பழைய ஏற்பாட்டு அடையாளத்துவத்துடன் தொடர்புடையவற்றைக் கடந்து செல்லுபவைகளாகக் குறிப்பிட்டேன். "வானத்தில் இருந்து வந்த கல்மழையும் அக்கினியும் அணுசக்திச் செயல்விளைவின் வீழ்வு'' என்பது போன்ற புதுமையான விளக்கங்களைக் குறிப்பிடுதல் பற்றி நான் கவலைப்படுவதில்லை. [44]நான் இந்தப்பாடத்தை,

*அர்க்கன்சாஸ் மாகாணத்தின் ஜட்ஸோனியாவில் போதித்தபோது, இயற்கைப் பேரழிவுகளின் மூலம் தேவன் நமக்குப் போதிக்க முயற்சி செய்வது பற்றி வகுப்பில் இருந்தவர்களின் கருத்தைக் கேட்டேன். பாடத்தில் கொடுக்கப்பட்ட சிந்தனைகளுடன் கூடுதலாக அவர்கள் பின்வரும் கருத்துக்களை ஏற்படுத்தினர்: (1) நாம் கொண்டுள்ள எல்லா உடைமைகளும் உண்மையில் நமக்குத் தேவைப்படுவதில்லை. (2) நாம் ஒவ்வொருவரும் மற்றவருக்கு தேவைப்படுகின்றோம். (3) தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல.* [45]Hailey, 219. [46]Albert E. Brumley, arr., "This World Is Not My Home," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [47]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation*, The Bible Speaks Today Series (Downers Grove, III.: Intervarsity Press, 1975), 95. [48]*சில மொழிபெயர்ப்புகளில் இவ்விடத்தில் "தூதன்" என்றுள்ளது (தமிழ் மொழிபெயர்ப்பிலும் இவ்வாறே உள்ளது), ஆனால் கையெழுத்துப் பிரதியின் ஆதாரம் "கழுகு" என்ற வார்த்தைக்கே ஆதரவாக உள்ளது. கழுகின் வலிமை வாய்ந்த இறகுகள், அது "மத்திய ஆகாயம்" வரைக்கும் செல்ல அனுமதிப்பதாலும். அது பாய்ந்து பற்றும் பறவை என்பதாலும், அது முதல் நூற்றூண்டில் தனித்தன்மை வாய்ந்த காட்சிக்குரியதாயிருந்தது என்பதாலும், இவ்விடத்தில் கழுகு என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டில், எங்களில் பலர் கழுகை அந்தக் கண்ணோக்கில் காண்பதில்லை (கழுகு எங்கள் தேசீயப் பறவையாக உள்ளது); எனவே அமெரிக்க நாட்டுப் போதகர்கள், தங்கள் உரையைக் கேட்பவர்களை ஆகாயத்தில் வட்டமிடும் வல்லூறு ஒன்றைப் பற்றி நினைக்கும்படி பரிந்துரைக்கலாம்.* [49]*வெளிப்படுத்தின விசேஷத்தில் "பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்பது கிறிஸ்தவரல்லாதவர்களை -அதாவது அவிசுவாசிகளை, தங்களது ''பிரியங்களைப் பூமியின்மீது மையப்படுத்தியுள்ளவர்களை'' குறிக்கிறது (கொலோசெயர் 3:2).* [50]" 'Woe' *என்ற ஆங்கில வார்த்தையும் அதற்குச் சமானமான கிரேக்க வார்த்தையும் ... வெறுமையான மற்றும் துக்கம் நிறைந்த ஒலியைக் கொண்டுள்ளன"* (Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977], 329.

[51]*''எக்காள ஒலி'' மற்றும் ''உங்கள் காதுகளில் உங்கள் விரலை வைத்து அடைத்துக் கொள்வது" என்ற சொற்றொடர்கள் உருவகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *காலை வேளையில் உறக்கத்தில் இருந்து பண்பற்ற வகையில் எழுப்பப்படுதல் பற்றி நீங்கள் எவ்வாறு உணருகின்றீர்கள்? ஆவிக்குரிய உறக்கத்தில் இருந்து கர்த்தரால் எழுப்பப்படுவதை மக்கள் மகிழ்வுடன் அனுபவிக்கின்றனரா?*
2. *வேதாகமத்தில் எக்காளங்கள் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளில் சில யாவை?*
3. *எரிகோவின் வெற்றியிலும் (யோசுவா 6) நகர மதில்களைக் காவல் செய்தவனாலும் (எசேக்கியேல் 33:1-6) எக்காளங்கள் பயன்படுத்தப் பட்ட விதத்தைப் பற்றிக் கலந்துரையாடத் தயாராயிருக்கவும்.*

4. *எச்சரித்தல் என்பது ஏழு எக்காளங்களின் நோக்கங்களில் ஒன்றாக (ஒருவேளை முதன்மையான நோக்கமாக) இருந்தது என்று கூறுவதற்கு இந்தப் பாடம் தருகின்ற காரணங்கள் யாவை?*
5. *முதல் நான்கு எக்காளங்களை யாத்திராகமத்தின் பத்து வாதைகளுடன் ஒப்பிடவும். அவைகள் எவ்வாறு ஒன்றுபோல் உள்ளன? அவைகள் எவ்வாறு வேறுபட்டுள்ளன?*
6. *முதல் நூற்றாண்டில் இருந்த மக்கள் புரிந்துணர்ந்த இயற்கையின் நான்கு வகைப்பாடுகள் யாவை? இந்த நான்கு வகைப்பாடுகளும் முதல் நான்கு எக்காளங்களுடன் எவ்வாறு தொடர்புடையவைகளாய் இருக்கின்றன என்பதைக் கூறவும்.*
7. *முதல் எக்காளம் ஊதப்பட்டபோது என்ன நடந்தது என்று கூறவும்.*
8. *இரண்டாம் எக்காளம் ஊதப்பட்டபோது என்ன நடந்தது என்று கூறவும்.*
9. *மூன்றாம் எக்காளம் ஊதப்பட்டபோது என்ன நடந்தது என்று கூறவும். "எட்டி" என்றால் என்ன?*
10. *நான்காம் எக்காளம் ஊதப்பட்டபோது என்ன நடந்தது என்று கூறவும்.*
11. *மக்களை எச்சரிப்பதற்கு இயற்கைப் பேரழிவுகளைத் தேவன் பயன்படுத்துதல் பற்றிக் கலந்துரையாடவும்.*
12. *இந்தப் பாடமானது, தேவன் இயற்கைப் பேரழிவுகள் மூலமாக நமக்குப் போதிக்க முயற்சி செய்யலாம் என்று குறிப்பிடுகிறது. அவைகள் யாவை? பேரழிவு தாக்கும்போது நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பக்கூடிய மற்ற செய்திகளைப் பற்றி நீங்கள் நினைக்க முடிகிறதா?*
13. *நீங்கள் மிகவும் பயப்படும் இயற்கைப் பேரழிவு எது?*



***ஒரு தூதன் எக்காளம் ஊதுதல் (8:2, 6)***



**முதலாம் எக்காளம் ஊதப்பட்டது *(8:7)***



இரண்டாம் எக்காளம் ஊதப்பட்டது (8:8, 9)



*மூன்றாம் எக்காளம் ஊதப்பட்டது (8:10, 11)*



நான்காம் எக்காளம் ஊதப்பட்டது (8:12)